## முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு --- 2

### மேல்நிலை முதலாம் ஆண்டு

### வணிகவியல்

நேரம் : 1.15 மணி　　　　　　　　　　　　　　　　மதிப்பெண் : 45

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**　　　　　　$10 \times 1 = 10$

1. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது ?
   அ) சட்டம்　　ஆ) நெறிமுறை　　இ) ஒழுங்குணர்வு　　ஈ) பொருளாதாரம்

2. பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின்---------------
   அ) கடனீந்தோர்　　ஆ) உரிமையாளர்கள்　　இ) கடனாளிகள்　　ஈ) இவைஎதுவும் இல்லை

3. ------------------ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.
   அ) அரசு பத்திரங்கள்　　ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்
   இ) பெருநிறுவன பத்திரங்கள்　　ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. சுய உதவிக் குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து --------- ஏற்படுத்த வேண்டும்.
   அ) பொது நிதி　　ஆ) குழு தொகுப்பு நிதி
   இ) குழு நிதி　　ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

5. மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது ------------
   அ) வெளிநாட்டு வியாபாரம்　　ஆ) உள்நாட்டு வியாபாரம்
   இ) மறு ஏற்றுமதி வியாபாரம்　　ஈ) வியாபாரம்

6. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?
   அ) மொத்த வியாபாரி　　ஆ) உற்பத்தியாளர்
   இ) சில்லறை வியாபாரி　　ஈ) வாடிக்கையாளர்கள்

7. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் ------------- என அழைக்கப்படுகிறது.
   அ) சந்தை வியாபாரிகள்　　ஆ) ஒரேவகை பண்டகச்சாலைகள்
   இ) பொதுப் பண்டகச்சாலைகள்　　ஈ) தெருக் கடைவியாபாரிகள்

8. பொருத்துக
   1. உள்நாட்டு வியாபாரம் ---- a. சீனப் பொருட்கள் இந்தியாவிலும் விற்பனை
   2. பன்னாட்டு வியாபாரம் ----- b. வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோலியம் வாங்குதல்
   3. ஏற்றுமதி வியாபாரம் ----- c. காஷ்மீர் ஆப்பிள் தமிழ்நாட்டில் விற்பனை
   4. இறக்குமதி வியாபாரம் ---- d. மதுரை மல்லிகையை சிங்கப்பூருக்கு அனுப்புதல்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | c | d | a | b |
| ஆ. | d | c | a | b |
| இ. | c | b | a | d |
| ஈ. | c | a | d | b |

9. தவறான கூற்று எது?

அ) வணிக முகவர்கள் பணிவழி இடைநிலையர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்
ஆ) வணிக முகவருக்கு பொருட்களை அடமானம் செய்து கடன்பெற உரிமையுண்டு
இ) வணிக முகவர்கள் பொருட்களுக்கு உரிமையாளராக உரிமையுண்டு
ஈ) வணிக முகவர்கள், தான் செய்யும் வியாபாரத்தின் அடிப்படையில் கழிவு பெறுகின்றனர்

10. கூற்று ( A ) : அமெரிக்க வைப்பு ரசீதுகள் அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும்.
காரணம் ( R ) : அமெரிக்க வைப்புகளை வெளியிடும் வைப்பக எண்ணி அமெரிக்காவை தவிர வேறு எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம்.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

11. பந்தக கடன் என்றால் என்ன?
12. தரகர் என்பவர் யார்?
13. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?
14. அமெரிக்க வைப்பு இரசீதின் ஏதேனும் இரண்டு சிறப்பம்சங்களை விளக்குக.
15. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் யாது?
16. திரு. இரமேஷ் அவர்கள் குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்பவர். அவரிடமிருந்து திரு. அரவிந்தன் அவர்கள் குறைந்த அளவில் பொருட்களை வாங்கிச் செல்கிறார். இதில், அ) திரு. இரமேஷ் என்பவர் எத்தகைய வியாபாரி?
ஆ) திரு. அரவிந்தன் என்பவர் எவ்விருவர்களை இணைக்கும் இணைப்புச் சங்கிலியாக விளங்குகிறார்?

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $4 \times 3 = 12$

17. புற ஒப்படைப்பின் தேவைகள் என்ன?
18. சுய உதவி குழு என்றால் என்ன?
19. தரகர் என்பவர் யார்?
20. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?
21. வணிக முகவர்களின் வகைகள் யாவை?
22. எத்தகைய பிணையங்களை ஈடாக பெற்றுக்கொண்டு கடன் மற்றும் முன்பணங்கள் வழங்கப்படுகிறது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $3 \times 5 = 15$

23. அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகளை விவரி.

( அல்லது )

உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

24. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

( அல்லது )

வணிக வங்கிகளால் வழங்கப்படும் குறுகிய கால நிதி ஆதாரங்களைச் சுருக்கமாக விளக்குக.

25. துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக

( அல்லது )

நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை என்றால் என்ன? அதன் நன்மைகள் யாவை?